**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் கேகாலை நீதி நிர்வாகப் பிரிவின் 2014/2015 ஆம் ஆண்டுக்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று இதே திகதியில் இதே வர்த்தமானி இலக்கத்தின்கீழ் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1906 - 2015 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2015.03.13

*1906 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *312* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *318* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, சித்திரை மாதம் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | தெஹியோவிட்ட | அட்டுலுகம் கோறளை மேற்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கோறளதுன, பாத்துபுலத்கம பிரிவின் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கேகாலை |

3-325

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, சித்திரை மாதம் 06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மாசி 20.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | கல்கமுவ | வல்பாலுவ பிரதேசத்தின் வன்னி ஹத்பத்துவ பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

3-326

---

## இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம், அநுராதபுரம்

மஹோபாதயாய அவர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள்/ பெயர்குறித்தல் கோரல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பௌத்த சிறாவக்க பிக்குகள் பல்கலைக்கழகம் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க பௌத்த சிறாவக்க பிக்குகள் பல்கலைக்கழக சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் மஹோபாதயாய பதவிக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள பிக்குமார்களிடமிருந்து விண்ணப்பங்கள்/பெயர் குறித்தல் கோரப் படுகின்றன.

1. இரண்டு வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்குள் நடாத்தப்பட்ட ஆராய்ச்சியின் மீது அங்கீகரிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தில் பௌத்த கல்விக்கு அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஏதேனும் விடயம் பற்றி பட்டப்பின் படிப்பு பட்டதாரி பட்டம் பெற்றிருத்தல்.
2. கல்வித்துறையில் பத்து வருட அனுபவம் பெற்றிருத்தல்.
3. கிழக்கத்திய மொழிகளில் நல்லறிவு இருத்தல்.
4. ''உப சம்பதாவ'' பெற்ற பின்னர் முழுமையாக 20 வருடங் களைப் பூர்த்தி செய்துள்ள ஒழுக்கமுள்ள பிக்குமாரின் ஒரு பெயராய் இருத்தல்.

மஹோபாதயாய அவர்களை 3 வருட காலத்திற்கு நியமிப்பதுடன், அவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகவும் பிரதான நிறைவேற்று அலுவலராகவும், பிரதான இக்கல்வி சம்பந்தமான மற்றும் பல்கலைக்கழகத்தின் கணிப்பிடும் அலுவலராகவும் இருப்பார். அவர் பதவி நிலையில் ''உத்தரீதர சபை''யின் ஓர் உறுப்பினராகவும் தவிசாளராகவும் இருப்பார். பல்கலைக்கழகத்தின் நன்னடத்தைக்கு மஹோபாதயாய அவர்கள் பொறுப்புடன் இருத்தல் வேண்டும். பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபை மற்றும் செனட் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் செயற்படுதல் அல்லது செயற்படச் செய்தலுக்கான பொறுப்பை அவர்களே பொறுப்பேற்றல் வேண்டும். மஹோபாதயாய அவர்கள் 3 வருட கால எல்லைக்கு அல்லது அறுபத்தைந்து (65) வயதைப் பூர்த்திசெய்தல் இவ்விரண்டில் எது முந்தியதோ அதுவரை பதவி வகிக்க முடியும்.

மஹோபாதயாய அவர்கள் பல்கலைக்கழகத்தின் அதியுயர் சம்பள அளவுத்திட்டத்தை பெறுவதுடன் அரசு மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய படிகளையும் பெறுவார். மஹோபாதயாய அவர்களுக்காக அலுவலக வாகனம், எரிபொருள் கொடுப்பனவு மற்றும் பல்கலைக்கழகத்தினுள் தங்குவதற்கான இடவசதியும் வழங்கப்படும். விண்ணப்பிக்கும் பிக்குமார் பல்கலைக்கழக முறைமையில் அரச சேவை/கூட்டுத்தாபனம் மற்றும் சபையில் சேவையாற்றும் தேரர் ஆயின், தமது நிறுவனத் தலைவரின் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென விண்ணப்பப்படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். இப்பிரிவு, இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் பிக்குமாருக்கு உரித்தானதல்ல.

விண்ணப்பங்கள் அல்லது பெயர் குறித்தல் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும் :-

(i) விண்ணப்பதாரி/பெயர்குறிப்பிட்டவர் வயது உட்பட தமது அனைத்து தரவுகள் சம்பந்தமான தகவல் ;

(ii) பல்கலைக்கழக அபிவிருத்தியின் பார்வை பற்றிய தனிப்பட்ட கூற்று மற்றும் மஹோபாதயாய பதவிக்கு நியமிக்கப்பட்டால், விண்ணப்பதாரி அதை நிறைவேற்ற எதிர்பார்க்கும் சிறு குறிப்பு ;

(iii) பெயர் குறிப்பிடுதலில் பெயர் குறிப்பவரின் சம்மதக் கடிதம் ;

(iv) விண்ணப்பதாரர்/பெயர் குறிப்பிடுபவர் அரச சேவை, கம்பனி, கூட்டுத்தாபனம், சபை மற்றும் இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர் கல்வி நிறுவகங்களில் சேவையாற்றுவோராயின், விண்ணப்பதாரி/பெயர் குறிப்பிடுபவர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதற் கான சேவை தீர்மானக் கடிதம்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பெற்றுள்ள பிக்கு விண்ணப்ப தாரிகள்/பெயர் குறிப்பிடுபவர்களிடையே மூன்று பெயர்களை நிர்வாக சபை தேர்ந்தெடுத்து "உத்தரீதர சபை" இற்குச் சமர்ப்பிக்கும். "உத்தரீதர சபை" இதில் ஒரு விண்ணப்பதார பிக்கு அவர்களின் பெயரை கௌரவ அமைச்சர் மூலம் மாண்புமிகு சனாதிபதி அவர்களுக்கு சிபார்சு செய்வார்.

விண்ணப்பப்படிவங்கள் அல்லது பெயர் குறித்தல் 2015.03.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "ஆவண அலுவலர், இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம், புத்தளம் வீதி, அநுராதபுரம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் வந்தும் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பெயர் குறித்தல் உரிய ஆவணங்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மஹோபாதயாய பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

யூ. டி. தொடன்வெல,
ஆவண அலுவலர் மற்றும்
நிர்வாக சபை அலுவலர்.

இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம்,
புத்தளம் வீதி,
அநுராதபுரம்,
2015, பெப்புருவரி 25.

3-365

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### உணவுப் பாதுகாப்பு அமைச்சு

### சட்ட அலுவலர் (நிறைவேற்றுத் தர வகுதியின் III ஆம் தர) பதவிக்காக திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2015

உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கு உரித்தான கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நிறைவேற்றுத் தர வகுதியின் III ஆம் தர சட்ட அலுவலர் பதவியில் நிலவுகின்ற 1 வெற்றிடத்தை நிரப்புவதற்காக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலமாக தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியதிகளின் பிரகாரம் தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அறிவித்தலின் இறுதியில் அமைந்துள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களைக் கீழ்க்காணும் திகதியிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ "செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, இல. 100-1/1, லோஹார் பிராட்டியார் கடன் நிதியக் கட்டிடம், சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 2" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்ட அலுவலர் பதவிக்கான திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2014" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2015.03.23 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு.**- விண்ணப்பப்படிவமோ அல்லது அது தொடர்பான ஆவணமோ தபாலில் காணாமல் போனதாகவோ அல்லது தாமதம் ஆனதாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தைத் தாமதிப்பத னால் ஏற்படுகின்ற இழப்புக்கு விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சைச் சபையினரால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளை வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அங்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள (இல. 6 இன்கீழ் காட்டப்படும்) புள்ளி வழங்குதல் விதிமுறைக்கு அமைவாக கட்டமைப்பான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **பணிக்கமர்த்தும் நிபந்தனைகளும், சேவை நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்துக்கு உரித்து டையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு உதவித் தொகை வழங்குதல் வேண்டும் ;

(ii) நியமனங்கள் 3 வருட தகுதிகூர் காலத்துக்கு ஏற்புடையதாகும். சட்ட அலுவலர் III ஆவது தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 வருடங்களினுள் ஆட்சேர்ப்பு விதிமுறையில் குறிக்கப்பட்டுள்ளவாறாக முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 இன் பிரகாரம் பதவியில் இணைந்து 5 வருடத்தினுள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பாக தேர்ச்சிபெற்றிருக்க வேண்டியதுடன், அரச கரும மொழி அல்லாத மொழி மூலமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களினால் தகுதிகூர் காலத்தினுள் உரிய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) நியமனங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழு ஊழியர் ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள கட்டளைச் சட்டத்துக்கும் கட்டுப்பட்டதாகும்.

3. **தேவையான தகைமைகள் :**

3.1 *கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்.*- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டத்தினைப் பெற்றிருத்தல்./ உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ;

3.2 *அனுபவம்.*- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின் 3 வருடத்திற்கு குறையாத தொடர்ச்சியான தொழில்சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் ;

3.3 *தேகாரோக்கியம்.*- எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும், போதியளவான தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

3.4 *ஏனைய தகைமைகள் :*

* இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையவராயிருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கு உரிய தகைமைகளை சகலவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;
* சரளமாக ஆங்கில மொழியைப் பேசக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இந்தப் பதவிக்கு ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 மாதாந்தச் சம்பளத் திட்டம் உரித்துடையதாகும்.

(2006.04.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் இல. SL-1-2006 சம்பளத் தொகுதி).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக கீழ்க்காட்டப்படும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :-

| இல. | விடயம் | | அதி கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | | 20 |
| | அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகமொன்றினால் பெற்றுக்கொள் ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டம்- | | |
| | முதலாவது தர சித்திக்காக | 20 | |
| | இரண்டாம் தர மேல்நிலை சித்திக்காக | 15 | |
| | இரண்டாம் தர கீழ்மட்ட சித்திக்காக | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதியாண்டில் முதல் தர சித்திக்காக | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதியாண்டில் இரண்டாம் தர சித்திக்காக | 10 | |
| | **குறிப்பு**.- கௌரவ சித்தியுடன் இறுதிப் பரீட்சையில் சித்திபெற்றிருப்பின் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்க முடியும். | | |
| | (அதிகூடிய தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். பட்டமொன்றினை அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுக்காக மாத்திரமே.) | | |
| 2. | மேலதிக தொழில்சார் தகைமைகள் | | 15 |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் ஒரு வருடத்துக்குக் குறையாத உரிய துறைசார் முதுமாணி டிப்ளோமா பட்டமொன்று அல்லது முதுமாணி சட்ட டிப்ளோமா பயிற்சிநெறி ஒன்றுக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் 6 மாதங்களுக்குக் குறையாத உரிய துறைசார் டிப்ளோமா பயிற்சிநெறி ஒன்றுக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் 3 மாதங்களுக்குக் குறையாத உரிய துறைசார் சான்றிதழ் பயிற்சிநெறி ஒன்றுக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 2 புள்ளிகள் வீதம்) | | |
| 3. | மேலதிக அனுபவம் | | 30 |
| | சட்டத்தரணியாக அரசாங்க சேவையிலோ அல்லது தனியார் பிரிவிலோ அனுபவம்- | | |
| | ஒரு வருடத்துக்கு 5 புள்ளிகள் வீதம் அதிகூடிய 30 புள்ளிகள். (சட்டத்தரணியாக அடிப்படைத் தகைமையை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான 3 வருட சேவைக்காலம் தவிர்ந்த) | | |

| இல. | விடயம் | | அதி கூடிய புள்ளி |
|---|---|---|---|
| | (20 வருடத்துக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள சட்டத் தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிபதி ஒருவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழின் மூலமாக மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.) | | |
| 4. | கணினியறிவு | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டத்துக்காக தகவல் தொழில்நுட்பத்தை முக்கிய பாடமாகக் கற்றிருத்தல் | 15 | |
| | அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத் தில் 1 வருடத்துக்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக டிப்ளோமா பாடநெறிக்காக அல்லது 1,500 மணித்தி யாலத்துக்காக | 10 | |
| | அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத் தின் மூலம் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்காக- | | |
| | 6 மாதம்/720 மணித்தியாலம் | 07 | |
| | 3 மாதம்/360 மணித்தியாலயம் | 05 | |
| | (அதிகூடிய தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 5. | ஆங்கில மொழித் தேர்ச்சி | | 15 |
| | ஆங்கில மொழி மூலமாக முதுமானி பட்டத்தை/பட்டத்தை/முதுமானி சட்ட வியல் பட்டத்தை/சட்டவியல் பட்டத்தை கற்றிருத்தல். (உரிய பரீட்சை வினாக்கள் சகலவற்றுக்கும் ஆங்கில மொழி மூலமாக விடையளித்திருத்தல் வேண்டும்.) | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவ னத்தில் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்காக (1 வருடம் அல்லது 1500 மணித்தியாலம்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது | | |

| இல. | விடயம் | | அதி கூடிய புள்ளி |
|---|---|---|---|
| | அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவ னத்தில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்காக- | | |
| | 6 மாதம்/720 மணித்தியாலம் | 07 | |
| | 3 மாதம்/360 மணித்தியாலயம் | 05 | |
| | (அதிகூடிய தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப் படும்.) | | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டிய திறமைகள் | | 05 |
| | மொத்தக் கூட்டுத்தொகை | | 100 |

7. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்.**- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுப்பது சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே.

நேர்முகப் பரீட்சையில் சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதியும், உரிய முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளையும் முன்வைத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்து வதற்காக கீழ்க்காணும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் :-

(1) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரினால் வெளியிடப் பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் :**

(i) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப் பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப் பங்களை ஏ4 அளவிலான கடதாசியைப் பயன்படுத்தி முதலாம் பக்கத்தில் இல. 1 இல் இருந்து 9 வரையும், இரண்டாவது பக்கத்தில் இல. 10 இல் இருந்து 13 வரையும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கத்திலுமாக இருக்கத்தக்கவாறாக தயாரித்து தமது கையெழுத்தினால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப் பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரி ஒருவர் அல்லது ரூபா 22,935 ஐ திரட்டிய மாதாந்தச் சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியை வகிக்கும் அதிகாரி ஒருவர் மூலமாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(iii) தற்போது அரசாங்க சேவையிலோ அல்லது மாகாண அரசாங்க சேவையிலோ கடமையாற்றும் உத்தியோகத்தர் தனது விண்ணப்பங்களைத் தான் கடமையாற்றும் திணைக்களத்தின் திணைக்கள மேலதிகாரியினூடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **போலியான தகவல்களை வழங்குதல்.-** தங்களால் அனுப்பப் படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் போலியானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முன் கண்டுபிடிக்கப்பட்டால் தங்களின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்விதமான போலியான அல்லது பிழையான தகவலொன்று ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின் கண்டுபிடிக்கப் பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. இந்த அறிவித்தல் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அதன்போது சிங்கள மொழிப் பதங்களே மேலோங்கி நிற்க வேண்டும்.

11. வெற்றிடங்களை நிரப்புவதற்கான அல்லது நிரப்பாதிருப்ப தற்கான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
உணவுப் பாதுகாப்பு அமைச்சு.

உணவுப் பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு 2,
2015, பெப்புருவரி 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

**உணவுப் பாதுகாப்பு அமைச்சினது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்ட அலுவலர் (நிறைவேற்றுத் தர வகுதியின் III ஆம் தர) பதவிக்கு ஆட்சேர்ப்பு**

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.
   (i) முதலெழுத்துக்களை பெயர் முடிவிலிட்டு, முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :
   (i) அலுவலக முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   (ii) தனிப்பட்ட முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

4. விண்ணப்பப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. பால் (ஆண்/பெண்) :----.

7. திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை/தபுதாரர் :----.

8. கல்வித் தகைமைகள் :
   (i) சட்டம் தொடர்பான பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழகம், திகதி மற்றும் மொழி மூலம் :----.
   (ii) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திகதி :----.

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/ டிப்ளோமா | வருடம் | பாடம் | சித்தி | நிறுவனத்தின்/ பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|
| | | |

11. கணினி அறிவு தொடர்பாகப் பெற்றுள்ள தேர்ச்சி :-
பட்டம் :----.
டிப்ளோமா :----.
சான்றிதழ் பாடநெறி :----.

12. ஆங்கில மொழி தொடர்பாகப் பெற்றுள்ள தேர்ச்சி :-
பட்டம் :----.
டிப்ளோமா :----.
சான்றிதழ் பாடநெறி :----.

13. நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாகி உள்ளீர்களா ? :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ளடக்கப்படும் ஏதேனும் தகவல்கள் போலியானது அல்லது பிழையானது என்பதனை என்னைத் தெரிவுசெய்யும் முன் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனத்தின் பின் கண்டுபிடிக்கப்படுமிடத்து எதுவித நட்டஈடும் வழங்காது சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இங்கு கையொப்பமிட்டுள்ள ............................ இல் வசிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. ஐ நான் தனிப்பட்ட ரீதியாக அறிவேன் எனவும், இவரின் கையொப்பம் ............ ஆந் திகதி என் முன்னிலையில் இடப்பட்டது எனவும் உறுதிப்படுத்து கிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

15. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
(தற்போது அரசாங்க சேவையில் பணிபுரிபவர்களுக்காக மாத்திரமே உரியது)

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமையாற்றுகின்ற திரு./திருமதி/செல்வி ................................. தற்போது ............................... பதவியில் பணியாற்றுவதுடன், அவரின் பணியும் நடத்தையும் திருப்திகரமானது எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை எனவும், அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்படவுமில்லை எனவும் உறுதியளிக்கிறேன். அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க இயலும்/இயலாது.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

திகதி :----.

3-445

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப மட்ட - பகுதி தேர்ச்சிபெற்ற (PL02-2006A) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - நில அளவைக் கள உதவியாளர்கள்

நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப மட்ட - பகுதி தேர்ச்சிபெற்ற (PL02-2006A) நில அளவைக் கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1

| ஆட்சேர்ப்புக்கான பதவி | ஆட்சேர்ப்புத் தரம் |
|---|---|
| நில அளவைக் கள உதவியாளர் | தரம் III |

1.2 பதவிக்கான கடமைகளின் தன்மை :

| பதவிப்பெயர் | முக்கிய அலுவல்கள் |
|---|---|
| நில அளவைக் கள உதவியாளர் | * அளவை தொடர்பான பருவ வரைபடம் கீற உதவுதல்<br>* அளவைப்புலப் புத்தகங்கள் மற்றும் கிடைப்படங்களைப் பயன்படுத்தி பழைய எல்லைகளை அவதானிப்பதற்கு ஏதுவாக அளவைக் கோடுகளைத் தயாரித்தல்<br>* அளவை தொடர்பான புலத்தில் முளைகளையும் எல்லைக் கற்களையும் திறந்து, நிறுவி அளவைக்காக தயார்படுத்தல்<br>* நில அளவை தொடர்பான பீடக் குறிகளை இனங்காணவும் நிறுவவும் அளவையில் நில அளவையாளர்களுக்கு உதவுதல் |

| பதவிப்பெயர் | முக்கிய அலுவல்கள் |
|---|---|
| | * களத்தில் அளவைக்கு பயன்படுத் தப்படும் உபகரணங்களைப் பேண வும், களஞ்சியப்படுத்தவும் உரிய பராமரிப்புப் பணிகளில் உதவுதல் * தியோடோலைட்டுக்கள், மட்டங் கள் மற்றும் புதிய இலத்திரனியல் பூரண மாணிகள் அடங்கலாகச் செய்மதித் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அளவைகளுக்கு களத்தில் அள வைப் புள்ளிகளில் புவிசார் இடமறியும் முறைமை (GPS) உபகரணங்களை நிலைநாட்டல் |
| | * வான் ஒளிப்படப் பிடிப்பிற்குத் தேவையான புவி பார்த்த பார் வைப் புள்ளிகளை அமைப்பது தொடர்பான சகல கடமைகளிலும் உதவுதல் * அளவைத் தரவுகளைச் சேகரிக்க வும் அளவைகளில் தெரிவுசெய் யப்பட்ட எல்லா இடங்களின் மையங்களையும் மட்டங்களையும் தீர்மானிப்பதற்குத் தேவையான இலக்குகளையும் அட்டவணை களையும் முறையாகப் பேண உதவுதல் * அளவை நடவடிக்கைகளில் சரி யான தரவுகளைப் பயன்படுத்தி களத்தில் எல்லைக் கற்களையும் பீடக் குறிகளையும் நிறுவுதல் * புல வேலைப் புத்தகம் மற்றும் சுவடு வரைதல்களையும் பயன் படுத்தி பூர்வாங்க நடவடிக்கை யாக காணித்துண்டுகளின் எல் லைக் குறியீடுகளை நிர்ணயிக்க உதவுதல் * நில அளவையாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதியி னால் ஒப்படைக்கப்படும் நில அளவை தொடர்பான எந்தவொரு கடமையிலும் ஈடுபடுதல் * நில அளவைக் கள உதவியாளர் தரத்தில் ஓவசியர் பதவி வகிப் போருக்கு மேற்குறித்த கடமை களுக்கு மேலதிகமாக ஏனைய நில அளவைக் கள உதவியாளரின் பணிகளை மேற்பார்வை செய்தல் பொறுப்பாகும். |

2. நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத் திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

**3. சம்பளம் :**

**அட்டவணை**

| தரம் | சம்பளப் படிமுறை | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| III ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 12,210 - 10,130 - 10,145 - 10,160 - 12,170 - ரூபா 18,600 (PL - 2 - 2006A) | ரூபா 12,210 |
| II ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 12,210 - 10,130 - 10,145 - 10,160 - 12,170 - ரூபா 18,600 (PL - 2 - 2006A) | ரூபா 13,655 |
| I ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 12,210 - 10,130 - 10,145 - 10,160 - 12,170 - ரூபா 18,600 (PL - 2 - 2006A) | ரூபா 15,120 |
| விசேட தரம் | மாதாந்தம் ரூபா 12,210 - 10,130 - 10,145 - 10,160 - 12,170 - ரூபா 18,600 (PL - 2 - 2006A) | ரூபா 16,730 |

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கும் உரித்துடையதாகும். இந்நியமனம் 3 வருட தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராயிருத்தல் வேண்டும். அரசாங்க சேவையின் நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

**5. தகைமைகள் :**

5.1 கல்வித் தகைமைகள் :

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 தொழில்சார் தகைமைகள்.- நில அளவைக் கள உதவியாளர் பதவிக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு வினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற் பயிற்சித் தகைமையில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாவது மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 ஆகக்குறைந்த நிபுணத்துவம் :

(அ) நில அளவைக் களத்தை இனங்காண உதவுதல் ;
(ஆ) அளவை உபகரணங்களையும், கருவிகளையும் பாதுகாத்தலும் பராமரித்தலும்.

5.4 உடல்சார் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கை யின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல், உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 ஏனையவை :

(i) ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான தகைமைகள் அனைத்தையும், விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.6 வயது.- விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு இவ்வுயர் வயதெல்லை ஏற்புடையதல்ல.)

6. **பிழையான தகவல்கள்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கும் தகைமையில்லையெனத் தெளிவானால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனுமொரு தகவலை அது பிழையெனத் தெரிந்துகொண்டு சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனும் தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது கண்டறியப் பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

7. **ஆட்சேர்ப்பு முறை.- எழுத்துப் பரீட்சை மூலம் பரீட்சைப் பாடத்திட்டம்**.- இப்பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்துமூலப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப்புள்ளி களின் அளவு | சித்தி எய்தப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளியின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| 1. பொது அறிவு | 100 | 40% | 2 மணித்தியாலங்கள் |
| 2. நுண்ணறிவு | 100 | 40% | 1 மணித்தியாலமும் 15 நிமிடங்களும் |

7.1 பாட விதானம் :

(i) பொது அறிவு.- இவ்வினாத்தாள் விண்ணப்பதாரர் தாம் வதியும் சுற்றாடல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, சமய, பொருளாதார பின்னணியுடன், விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமான பொது விடயங்கள் தொடர்பாகப் பெற்றுள்ள அறிவைப் பரிசோதிப்பதாக அமையும் ;

(ii) நுண்ணறிவு.- இது விண்ணப்பதாரரின் சிந்திக்கும் ஆற்றல், அலசி ஆராயும் தன்மை, சமயோசிதமாக தீர்மானமெடுக்கும் திறமை போன்றவற்றை அளவிடும் பல தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாத்தாளாகும்.

8. **தெரிவு முறை**.- நிலஅளவையாளர் நாயகத்தினால் நியமிக்கப் படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை சரி பார்ப்பதன் பொருட்டு மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு பின்னர் எழுத்துப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் மாத்திரம் தரம் III இற்கான நில அளவைக் கள உதவியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

சேர்த்துக்கொள்ளப்படும் நில அளவைக் கள உதவியாளர்களுக்கு ஒரு மாத கால கள மற்றும் கோட்பாட்டுப் பயிற்சி நில அளவைத் திணைக்கள பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படும்.

9. **விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்** :

(அ) இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 21 x 29 செ. மீ. (ஏ4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரிகள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். இல. 1 முதல் 6 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், இல. 7 முதல் 9.2 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும், இல. 10 முதல் 14 வரையான தலைப்புக்கள் மூன்றாம் பக்கத்திலும், இல. 15 முதல் 16.2 வரையான தலைப்புக்கள் நான்காம் பக்கத்திலும், உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையின் கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின்கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றைத் தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக இல்லாத, உரிய தினத்திற்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் விளைவுளை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என விண்ணப்பதாரர் பரிசீலித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்படுகின்றதென அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடுகளும் கவனத்தில்கொள்ளப்பட மாட்டாது.

9.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்திருப்பார்கள் எனும் முன் அனுமானத்தில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி 2015.03.28 ஆந் திகதியன்றோ அத்தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற நில அளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்குத் தோற்றவோ அல்லது இப்பதவிக்கான தகைமை உள்ளவர் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ கருதப்படக் கூடாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாகத் தகைமைகள் கொண்டவரெனப் பரிசீலிக்கும் வேளையில் தேவையான தகைமைகள் இல்லையென வெளிப்படுமானால் அவரது பரீட்சார்த்தி உரிமை பறிக்கப்படும்.

9.2 விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஆரம்ப மட்டப் பகுதி தேர்ச்சிபெற்ற பதவிகளுக்கு, ஆட்சேர்ப்பு, நில அளவைக் கள உதவியாளர்'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

9.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்தில் உள்ள அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 06/2006 இன் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களிலுள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 800 ரூபா ஆகும். இத்தொகையைக் கொழும்பு 5, கிருல வீதி, இல. 150 இல் அமைந்துள்ள நிலஅளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**.- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.03.28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சை),
அளவையியல் படமாக்கல் நிறுவனம்,
தியத்தலாவை.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கெனப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;

(ii) தபால் அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அஞ்சல் அடையாள அட்டை ;

(iii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நிலஅளவையாளர் நாயகத்தினால் சுற்றறிக்கை பிரகாரம் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட்டுள்ளனர்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, பெப்புருவரி 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப மட்ட - பகுதி தேர்ச்சி பெற்ற (PL 02-2006A) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - நில அளவைக் கள உதவியாளர்**

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

1. பரீட்சை இலக்கம் :

2. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் :
(சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

3. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

3.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

4. தேசிய அடையாள அட்டை இல. :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

5.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :----.

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. பால் : (ஆண் - M, பெண் - F) ☐

(தரப்பட்டுள்ள கூட்டினுள் உரிய குறியீட்டை இடவும்.)

7. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

7.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்) :

மாவட்ட இலக்கம் ☐

மாவட்டத்தின் பெயர் ☐

7.2 எப்போதிலிருந்து அம்மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள் ? : ----.

8. தொலைபேசி இலக்கம் :

நிலையான:----.
கையடக்க:----.

9. கல்வித் தகைமைகள்:

9.1 க. பொ. த. (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள் :
முதலாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

9.2 க. பொ. த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள்:
இரண்டாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

10. தொழில்சார் தகைமைகள் (பெற்றுள்ள NVQ தகைமைகள் பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

11. ஏனைய தகைமைகள் :----.

12. குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :-

ஆம் ☐ இல்லை ☐

12.1 ஆம் எனில் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

13. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் ? :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.

**14. விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யான தென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) .......................... ரூபா செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஈ) மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப் படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

(உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**15. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளேன் எனவும் அவர் .................. ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 14 ஆம் பந்தியின்கீழ் கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:----.
பதவிப் பெயர்:----.
முகவரி----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)
திகதி:----.

16. **திணைக்களத் தலைவரின் பரிந்துரை:**
(அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்ப தாரர்களுக்கு மாத்திரம்)

16.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள் வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/ திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங் களையும் உழைத்துள்ளார்/உழைக்கவில்லை எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகவில்லை/உள்ளாகி யுள்ளார்.

16.2 விண்ணப்பிப்பவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப் பட்டால் தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/விடுவிக்கப்பட முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி:----.

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 7.1 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ்வட்டவணை தொடர்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்களின் பெயர்கள் | நகரங்களின்/மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலன்னறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

3-390

## காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

**காணி உபயோகத் திட்டமிடல் உதவி அலுவலர்களுக்கான II ஆவது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சை - 2014(2015)**

Second Efficiency Bar Examination for Land Use Planning Assistants of Land Use Policy Planning Department - 2014(2015)

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் காணி உபயோகத் திட்டமிடல் உதவி அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் 2015 ஆம் ஆண்டு ஆனி மாதம் நடாத்தப்படும்.

**2. பரீட்சை நடைமுறை மற்றும் விடய சிபாரிசுகள்.-** இவ்வினைத் திறமைகாண் தடைதாண்டற் பரீட்சை இரண்டு வினாத்தாள்களை யுடையதாக இருக்கும் :

1 ஆவது வினாத்தாள்.- முகாமைத்துவம் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படைகள் (காலம் : 3 மணித்தியாலங்கள்)

2 ஆவது வினாத்தாள்.- காணி உபயோக முகாமைத்துவ நுணுக்கங்கள் (காலம் : 3 மணித்தியாலங்கள்)

1 ஆவது வினாத்தாள்களில் 8 கேள்விகளும், 2 ஆவது வினாத்தாளில் 8 கேள்விகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒரு வினாத்தாளில் 5 கேள்விகள் வீதம் இரண்டு வினாத்தாள்களிலும் பதில் வழங்குவதை எதிர்பார்க்கின்றோம். அனைத்து கேள்வி களுக்கும் சமனான புள்ளிகள் வழங்கப்படும். சித்தியடையும் புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.

1 ஆவது வினாத்தாள்.- முகாமைத்துவம் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படைகள் :

(அ) முகாமைத்துவம் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படைகள் மற்றும் அவற்றை உபயோகித்து அரசாங்க நிறுவனங்களுக்குள் பிரச்சினைகளைத் தீர்த்தல்

(ஆ) நிறுவன முகாமைத்துவத்தின் ஊடாக வினைத்திறன் மற்றும் வினைத்திறனை உயர்த்துதல்

(இ) பங்குபற்றல்சார் முகாமைத்துவம்

(ஈ) தலைமைத்துவம் மற்றும் ஊக்கப்படுத்தல்

2 ஆவது வினாத்தாள்.- காணி உபயோக முகாமைத்துவ நுணுக்கங்கள் :

(அ) இலங்கையில் காணி உபயோகம், திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக பொறுப்புடைய நிறுவனங்களின் தொழிற்பாடுகள்

(ஆ) இலங்கையில் பல்வேறு மட்டத்திலான காணி உபயோக வழிமுறைகள் மற்றும் தேசிய காணி உபயோகக் கொள்கைகள்

(இ) இலங்கையில் காணி உபயோகத்தை திட்டமிடுதல், அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பான நடைமுறைச் சட்டதிட்டங்கள்

(ஈ) காணி உபயோகம் மற்றும் சூழல் ரீதியான தாக்கங்கள் தொடர்பான திறனாய்வு

(உ) காணி உபயோகத் திட்டமிடலின்போது மக்களின் பங்களிப்பு

3. இந்தப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் மட்டும் நடத்தப்படும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகளால் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவத்தை "ஏ4" அளவு கடதாசி ஒன்றில் இரு பக்கமும் தயாரிக்க வேண்டும். பரீட்சார்த்தி விண்ணப்பப்படிவத்தை பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் பூர்த்திசெய்ய வேண்டும். கோரும் மொழி பின்னர் மாற்றப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இல. 1.0 இருந்து 4.0 வரை முதற்பக்கத்திலும், மீதியை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரிக்கப்பட வேண்டியதோடு அதற்குரிய தகவல்களை தனது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் உள்ளடக்கப்பட வேண்டும். அவ்வாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பரீட்சை அறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பது தொடர்பாக கவனிக்க வேண்டும். அவ்வாறு இல்லாத அல்லது முழுமையல்லாத தகவல்களை குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி மற்றும் பணி இடம், பரீட்சை தொடர்பான அனைத்து செயற்பாடுகளுக்காகவும் உரியதாவதோடு விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட்ட பின்பு அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எது தொடர்பாகவும் பரீட்சிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்கு எத்தனையாவது தடவையாகத் தோற்றுகின்றீர்கள் என்பதனைக் குறிப்பிட வேண்டும்.

4. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட உடனேயே அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிக்கையொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாள் கடந்தும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையெனில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அதன்போது உங்கள் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், பரீட்சையின் பெயர் என்பனவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதி ஒன்றை பெக்ஸ் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை பெக்ஸ் மூலம் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பிற்கு வெளியே எனில் அனுமதிப்பத்திரத்தை அனுப்பி வைப்பதற்கு பெக்ஸ் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு உமது வேண்டுகோள் கடிதத்தையும் அனுப்புதல் வேண்டும். இதன்போது, நீங்கள் கைவசம் வைத்துக் கொண்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை அஞ்சலிலிட்டமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயார்படுத்தி வைத்திருத்தல் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

5. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் அனைத்து விடயங்களிலும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையக்கூடியவாறு தமது சுய தரவுகளை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு (பாஸ்போர்ட் அனுமதிப்பத்திரம்).

விண்ணப்பப்படிவங்கள் 2015, சித்திரை மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்குறிப் பிடப்படும் முகவரிக்கு மாவட்ட காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் அலுவலரின் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

பணிப்பாளர் நாயகம்,
காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்,
இல. 31, பாதிபா வீதி,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05.

6. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி களிடம் இருந்து கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும் :-

(அ) வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு முதலாவதாகத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது ;

(ஆ) முதலாவது தடவைக்குப் பின்னர் ஒரு பாடத்திற்காக 200 ரூபா வீதம் அறவிடப்படும் ;

(இ) உரிய பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வரவு தலைப்பு இலக்கம் 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படுமாறு எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்திப் பரீட்சார்த்தியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் ஓர் ஓரத்தை உரிய விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் நன்றாக ஒட்டுதல் வேண்டும். இப்பற்றுச்சீட்டின் நிழற்பிரதியினை உங்கள் கைவசம் வைத்திருப்பது பயனுடையதாக அமையும்.

7. இந்தப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை நுழைவு அனுமதி அட்டை விநியோகிப்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளைப் பூர்த்திசெய்ததாகக் கருத முடியாது. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பப்படிவம் அனுப்பியுள்ள அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டை விநியோகிக்கப்படுவதோடு பரீட்சையில் தோற்றுவதற்கு அவர்களுக்கு அலுவலக பொறுப்பாளரால் கடமை விடுமுறை வழங்கப்படும். பரீட்சை தொடங்கும் நாள் தமது கையொப்பத்தை உறுதிசெய்யப்பட்ட அனுமதி அட்டையை மண்டப பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

9. நடைமுறையில் இருக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கு அமைய இப்பரீட்சை நடாத்தப்படுவதோடு இப்பிரமாணங்களுக்கு உட்படாத ஏதாவதொரு விடயம் இருப்பின் அது தொடர்பாக காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் பணிப்பாளரின் தீர்மானத்தின்படி செயற்படுத்தப்படும்.

பீ. எம். சாந்தி பிரனாந்து,
பணிப்பாளர்.

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்,
இல. 31, பாதிபா வீதி,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக : [ ]

**காணி உபயோகத் திட்டமிடல் உதவி அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014 (2015)**

Second Efficiency Bar Examination for Land Use Planning Assistants of Land Use Policy Planning Department - 2014(2015)

உரிய மாவட்டம் :

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

1. பெயர் :
   1.1 முதலெழுத்தைக் கடைசியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதா. SILVA. A.B. :----.
   1.2 முதலெழுத்துக்களில் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   1.3 முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :----.

2. அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   2.1 கடமை முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   2.2 நிரந்தர முகவரி (தமிழில்/சிங்களத்தில்) :----.

3.
   3.1 பால் :
   பெண்-1, ஆண்-0 [ ]
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
   3.2 குடியியல் தன்மை : [ ]
   திருமணம் செய்யாதவர்-1, திருமணம் செய்தவர்-2
   3.3 பிறந்த திகதி :
   ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]
   3.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   [ | | | | | | | | | | ]

4. பரீட்சையில் தோற்றும் பாடங்கள் :

| தோற்றவுள்ள பாடங்கள் | பாட எண் |
|---|---|
| | |
| | |

முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு தொடர்பான அடிப்படைகள்-1
காணி உபயோக முகாமைத்துவ நுணுக்கங்கள்-2
(பாடம்/பாடங்கள் எண்ணிக்கையினைக் கூட்டினுள் இடவும்)

5. பரீட்சைக்கு தோற்றுவது முதல் முறையாகவா ? :----.

6. பரீட்சைக்குத் தோற்றுவது இரண்டாவது தடவையெனில் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினைத் தரப்பட்டுள்ள பெட்டியில் ஒட்டவும் :
   (i) செலுத்தப்பட்ட பணம் ---- ரூபா
   (ii) செலுத்தப்பட்ட திகதி :----.
   (iii) செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
   (iv) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

பற்றுச்சீட்டினைக் கழறாதவாறு இவ்விடத்தில் ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினைத் தங்கள் வசம் வைத்திருக்கவும்.)

7. தற்போது வகிக்கும் பதவி மற்றும் வகுப்பு :----.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், கோரியுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவர் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கிறேன்.

மேற்குறிப்பிடப்படும் பரீட்சார்த்திக்கு (ஆண்/பெண்) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி உண்டென்றும், அவர் குறிக்கப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகுதியுண்டென்றும் உறுதிசெய்கிறேன். அவர் இப்பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றுகின்றார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். (தேவையற்றதை வெட்டிவிடவும்.)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி நிலை.

திகதி :----.

3-419

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.